**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No.117/2018**

PW-2

| | | | |
|---|---|---|---|
| Name | மஞ்சுப்பிரியா(PW2) | | |
| Husband's Name | சிவசாமி | Calling | |
| Village | சேவூர் | | |
| Taluk | அவிநாசி | Age | |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th **day of March 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி ஆஜர்

**குறுக்கு விசாரணை எதிரி தரப்பில் :**

இறந்து போன பழனிசாமி முதலிபாளையத்திலிருந்து சேவூர் நோக்கி கிழக்கிலிருந்து மேற்காக நீல நிற இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார் என்று என் முதல் விசாரணையில் சொல்லி உள்ள விபரம் சரியா என்றால் சரிதான். காலம் சென்ற பழனிச்சாமி முதலி பாளையத்திலிருந்து சேவூர் ரோட்டில் தென் புறமாக தான் அவர் பயணத்திருப்பார் என்றால் அவர் சரியான பாதையில் தான் சென்றார். விசாரணை ஆவணங்களில் நான் சொன்ன திசையில் காலம் சென்ற பழனிச்சாமி பயணிக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடத்தில் உள்ள திசைகளை என்னால் சொல்ல முடியாது என்றால் சொல்ல முடியும். பழனிச்சாமி ரோட்டின் இடது புறமாக சென்று கொண்டிருந்தார். காலம் சென்ற பழனிச்சாமி முதலிபாளையத்திலிருந்து சேவூர் நோக்கி ரோட்டின் இடது புறமாக சென்று கொண்டு இருந்தார் என்றால் சரிதான். நான் சம்பவம் நடக்கும்போது நான் எங்கு இருந்தேன் என்றால் பிள்ளையார் மற்றும் மாரியம்மன் கோவில் அருகே நின்று கொண்டிருந்தேன். நான் என் முதல் விசாரணையில் மாரியம்மன் கோவில் அருகே நின்று கொண்டிருந்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் மாரியம்மன் கோவில் இல்லை என்றால் உள்ளது. விநாயகர் கோயில் மற்றும் மாரியம்மன் கோவில் என்பது ஒரே இடம் என்றால் சரிதான். அது தனித்தனி இடத்தில் இருப்பதாக சொன்னால் தவறு என்றால் சரிதான். நான் எதற்காக அந்த இடத்தில் நின்று கொண்டிருந்தேன் என்றால் என் மகன் சிறு வயதாக இருந்ததால் அவனை அங்கு வைத்து நின்று கொண்டு இருந்தேன். என் வீடு கோவில் அடுத்து ஒரு வீட்டை அடுத்து உள்ளது. பட்டியல் சாட்சி உள்ள சிவசாமி என் கணவர் என்றால் சரிதான். பழனிச்சாமி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் பதிவு எண் மற்றும் தண்ணீர் வண்டியின் பதிவு எண் எனக்கு தெரியுமா என்றால் நீண்ட நாட்கள் ஆகிவிட்டதால் எனக்கு ஞாபகம் இல்லை.

தண்ணீர் வண்டியின் எந்த பகுதி பழனிசாமி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தில் மோதியது என்றால் தண்ணீர் லாரியின் வலது புறம் முன்பக்கத்தில் மோதப்பட்டது. இருசக்கர வாகனமும் தண்ணீர் லாரியும் எதிரெதிரே முன் பக்கங்களில் மோதிக்கொண்டது. மேற்சொன்ன விபரத்தை நான் சொன்னேனா இல்லையா என்று எனக்கு ஞாபகம் இல்லை. காலம் சென்ற பழனிசாமியின் வாரிசுகள் நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளது நான் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். காலம் சென்ற பழனிசாமிக்கு வெளிப்புற காயங்கள் ஏதுமில்லை என்றால் சரிதான். காலம் சென்ற பழனிச்சாமியை சம்பவ இடத்திலிருந்து உறவினர் அழைத்து சென்றதாக சொல்லி உள்ளேன், யார் யார் அழைத்து சென்றார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் அவர்கள் யார் யாரென்று எனக்கு சொல்ல தெரியாது. விபத்திற்கு பின்னிட்டு காலம் சென்ற பழனிசாமியை மருத்துவமனை அழைத்து சென்றார்களா இல்லையா என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் காவல்துறையினருக்கு எதிரியை அழகாத்திரிபாளையத்தில் வைத்து தான் அடையாளம் காண்பித்தேன். எதிரியை நான் சம்பவ தினத்திற்கு மறுநாள் அடையாளம் காண்பித்தேன். மேற்சொன்ன விபரத்தை நான் என் வாக்கு மூலத்தில் சொல்லி உள்ளேனா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை ஆனால் எதிரியை நான் அடையாளம் காண்பித்தேன்.
நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும் என் கணவர் நஷ்ட ஈடு வழக்கை எடுத்து நடத்தி தருவதாக சொல்லி இருப்பதால் நானும் என் கணவரும் கண்ணுற்ற மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளாக இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு அருகில் ராஜன் வீடு, சென்னியப்பன் வீடு, மயில்சாமி வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன நபர்கள் சம்பவ இடத்தில் இருந்தார்களா என்றால் யாரும் இல்லை. மேற்சொன்ன நபர்களை போலீசார் விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. சொன்ன நேரத்தில் சொன்ன முறையில் நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் குறிப்பிட்டு சொல்லும் இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நஷ்ட ஈடு வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>Sd–N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |